**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**முன்னிலை–திரு. R. தோத்திரமேரி, M.A., L..L.M.,**
**அமர்வு நீதிபதி(கூ.மு.பொ),**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின்கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

2026–ஆம் வருடம், ஜுலை மாதம், 28 ஆம் நாள், செவ்வாய் கிழமை.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.7/2023**
**(CNR No.TNSA25–000461–2024)**

| | | |
|---|---|---|
| **குற்றமுறையிடுபவர்** | : | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆணையாளர்,<br>அம்மாபேட்டை சரகம்,<br>சேலம் மாநகரம்.<br>அனைத்து மகளிர் காவல் நிலையம்,<br>அம்மாபேட்டை.<br>குற்ற எண். 23/2022. |
| **எதிரிகளின் பெயர்** | : | 1. சந்தோஷ்குமரன் (27/2022),<br>த/பெ. ஜெகநாதன்,<br>19/34D. காந்திபுரம் 4 வது கிராஸ்,<br>பள்ளிப்பாளையம் –638 006.<br>நாமக்கல் மாவட்டம்.<br>2. ராஜ்கணேஷ்லிங்கம் (26/2022),<br>த/பெ. பிரகாஷ்,<br>297–A. அக்னி மாரியம்மன் கோவில் தெரு,<br>அவரங்காடு, பள்ளிப்பாளையம் –638 006. |



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:27:39 +0530

<table>
<tr><th>S.No</th><th colspan="4">CASE SUMMARY</th></tr>
<tr><td>i.</td><td>The period of remand of the Accused</td><td colspan="3">A1 & A2 - 13.06.2022</td></tr>
<tr><td>ii.</td><td>The date of filing of the complaint / final report in the Court</td><td colspan="3">02.02.2023</td></tr>
<tr><td>iii.</td><td>The date of committal of the case to the Court of Session</td><td colspan="3">--</td></tr>
<tr><td>iv.</td><td>The date of questioning of A1 & A2 U/s- 228, 240, 246 and 251 CrPC as the case may be</td><td colspan="3">U/s 228 of CrPC –07.11.2023</td></tr>
<tr><td rowspan="6">v.</td><td rowspan="6">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/s 317 of code</td><td>CMP No.</td><td>Section / Prayer</td><td>Result</td></tr>
<tr><td>Crl.O.P. No. 12784/2022 of Hon’ble High Court of Madras.</td><td>A1 & A2 filed petition U/s 482 of CrPC to direct the trial Court to consider the bail on the same day of surrender.</td><td>Allowed on 26.05.2022</td></tr>
<tr><td>Crl.M.P 2218/2022 of PDJ Court, Salem.</td><td>Bail U/s 439 of CrPC filed by A1 & A2</td><td>Allowed on 13.06.2022</td></tr>
<tr><td>Crl.M.P.No.244/26 on the file of this Court.</td><td>Petition U/s 311 of CrPC to recall the PW1 filed by A1 & A2</td><td>Allowed on on 29.06.2026</td></tr>
<tr><td>Crl.M.P.No.243/26 of this Court.</td><td>Advance hearing petition filed by A1 & A2</td><td>Allowed on 29.06.2026</td></tr>
<tr><td>Crl.M.P.No. 271/2026 of this Court.</td><td>Petition U/s 359(1) of BNSS to compound the case filed by A1 & A2.</td><td>Dismissed on 23.07.2026</td></tr>
</table>



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:27:47 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | Crl.M.P.No. 272/2026 of this Court. | Petition U/s 359(2) of BNSS to permit compound the case filed by A1 & A2. | Dismissed on 23.07.2026 |
| vi. | Date of examination in-chief and cross-examination of a witness | **Name of the Witnesses** | **Date of Chief Examination.** | **Date of Cross Examination** |
| | | PW1 Mrs.Moulya | 15.06.2024 | 15.06.2024 & 23.07.2026 |
| | | PW2 Mr.Semmalai | 10.07.2025 | 10.07.2025 |
| | | PW3 Mr.Muthuraja | 08.08.2025 | 08.08.2025 |
| | | PW4 Mr.Ravi | 04.09.2025 | -- |
| | | PW5 Mr.Sivakami | 09.10.2025 | 09.10.2025 |
| | | PW6 Mr.Saravana Kumaran | 25.10.2025 | 25.10.2025 |
| Vii. | Date of examination of the Accused U/s 313 of Code | 24.07.2026 | | |
| Viii. | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be | Nil | | |
| ix. | Grant of stay by superior Courts and the results thereof | NIL | | |
| முதலாவது குற்றச்சாட்டு | | A1–பட்டியல் இனத்தவர் என்பது தெரிந்திருந்தும், பொது பார்வையில் கெட்டவார்த்தையாலும், ஜாதி பெயரை சொல்லி திட்டி இழிவு படுத்துதல் – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(1)(r) &(s)ன் படி. | | |
| இரண்டாவது குற்றச்சாட்டு | | A1–கையால் தாக்கி சாதாரணக் காயம் ஏற்படுத்துதல் – இதச பிரிவு 323 ன் படி. | | |



R THOTHIRAMARY

Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:27:54 +0530

| | |
|---|---|
| மூன்றாவது குற்றச்சாட்டு | A1– மனைவியை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் கொடுமைப் படுத்துதல் – இதச பிரிவு 498A ன் படி. |
| நான்காவது குற்றச்சாட்டு | A1 & A2– கொலை மிரட்டல் விடுத்தல் – இதச பிரிவு 506(1)ன் படி. |
| ஐந்தாவது குற்றச்சாட்டு | A1 & A2 – பட்டியல் இனத்தவர் என்பது தெரிந்திருந்தும், பட்டியலில் கண்ட இதசவின் கீழானக் குற்றம் புரிதல் – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(2)(va)ன் படி. |
| 1 மற்றும் 2 ஆம் எதிரிகளின் பதில் | பொய் வழக்கு |
| நீதிபதியின் தீர்மானம் | 1 வது எதிரி மீதான இதச 323, 498A, 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r)& (s), 3(2)(va)ன் கீழானக் குற்றச்சாட்டுகள் மற்றும் 2 வது எதிரி மீதான இதச 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(2)(va)ன் கீழானக் குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை. |
| தண்டனை (அ) உத்தரவு | 1 வது எதிரி மீதான இதச 323, 498A, 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r)&(s), 3(2)(va)ன் கீழானக் |



R THOTHIRAMARY

Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:28:00 +0530

| | |
|---|---|
| | குற்றச்சாட்டுகள் மற்றும் 2வது எதிரி மீதான இதச 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(2)(va)ன் கீழானக் குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 ஆம் எதிரிகளுக்கு வழங்கி 1 மற்றும் 2 ஆம் எதிரிகளை பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா பிரிவு 258(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2 ஆம் எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதுமில்லை. எனவே வழக்கு சொத்து சம்மந்தமான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு என் முன்பாக 24.07.2026 அன்று முடிவான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, குற்றமுறையீடுபவரான அரசுக்காக திரு.A. கார்த்திகேயன், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களும், 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.S. அன்பு, அவர்களும் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், அரசு தரப்பில் முன்னிடப்பட்ட ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.



R THOTHIRAMARY

Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:28:09 +0530

**தீர்ப்புரை**

**சேலம் மாவட்டம், அம்மாபேட்டை சரகம் காவல் உதவி ஆணையாளர் தாக்கல் செய்த வழக்கின் சுருக்கம்:-**

1. சேலம் மாவட்டம், தாதம்பட்டி, அண்ணாநகர், கதவு எண் 1 என்ற முகவரியில் குடியிருக்கும் பட்டியல் இனத்தை சார்ந்த வாதி மௌல்யா த/பெ. கணேசன் என்பவர் கடந்த 2020 ஆம் ஆண்டு, சேலம் சரவணா மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றியுள்ளார். அதே மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றிய இந்து தேவாங்க செட்டியார் சாதியை சார்ந்த 1 ஆம் எதிரி வாதி மௌல்யாவை காதலித்த வந்த நிலையில், 1 ஆம் எதிரியின் பெற்றோர் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளததால், திருச்செங்கோடு கோவிலில் வைத்து வாதி மௌல்யா மற்றும் 1 ஆம் எதிரி ஆகிய இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனர். மேற்படி திருமணத்தை வாதியின் பெற்றோர் ஏற்றுக் கொண்ட நிலையில், வாதி மௌல்யா மற்றும் 1 ஆம் எதிரி ஆகிய இருவரும் பிள்ளையார் நகரில் தனிக்குடித்தனம் இருந்துள்ளனர். இந்நிலையில் வாதியானவர் NEET பரிட்சைக்கு படிக்க முற்பட்டதை 1 ஆம் எதிரி மறுத்தும், 25.03.2022 ஆம் தேதி, NEET பரிட்சைக்கு வாதி விண்ணப்பித்துள்ளார். மேலும் 1 ஆம் எதிரி மேற்படி விண்ணப்பத்தில்



R THOTHIRAMARY Digitally signed by R THOTHIRAMARY Date: 2026.07.28 18:28:19 +0530

ஜாதியை SC என்பதற்கு பதிலாக General என குறிப்பிட வற்புறுத்திய நிலையில், வாதியானவர் ஜாதியை SC எனக் குறிப்பிட்டு விண்ணப்பித்ததால், அன்றிரவு 1 ஆம் எதிரி மது அருந்தி வந்து, வாதியை ஜாதி பெயரை சொல்லி திட்டி, அடித்துள்ளார். மேலும் இரும்பாலையில் உள்ள மருத்துவமனைக்கு நேர்காணலுக்கு இருவரும் சென்ற நிலையில், 20.04.2022 ஆம் தேதி வாதி மௌல்யாவிற்கு மட்டும் நியமன உத்தரவு வந்த நிலையில், 1 ஆம் எதிரி வாதியை வேலைக்கு செல்லக்கூடாது என்று கூறியுள்ளார். ஆனால் வாதி மௌல்யா வேலைக்கு சென்ற நிலையில், 1 ஆம் எதிரி அன்றிரவு மது அருந்தி வீட்டிற்கு வந்து வாதியை ஜாதி பெயரை சொல்லி இழிவுபடுத்தி, அவரை அடித்தும், வாதி மௌல்யா 3 மாதங்கள் கர்ப்பமாக உள்ளார் என்பதை அறிந்தும், வாதியின் வயிற்றில் காலால் எட்டி உதைத்தும், தலையை பிடித்து சுவற்றில் முட்டவைத்துள்ளார். மேலும் வீட்டின் கதவை பூட்டி விட்டு, வாதியின் போனை எடுத்து கொண்டு சென்றுள்ளார். பின்னிட்டு 21.04.2022 ஆம் தேதி, பிற்பகல் 1.30 மணியளவில், 1 ஆம் எதிரியானவர் 2 ஆம் எதிரியுடன் வீட்டிற்கு வந்து, வாதியிடம் மேற்படி



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:28:30 +0530

பிரச்சனை பற்றி யாரிடமும் சொன்னால் கொன்று விடுவதாக மிரட்டியுள்ளனர். எனவே எதிரிகள் இருவரும் இதச பிரிவுகள் 323, 498A, 506(1) ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகளுக்கு எதிராக அம்மாபேட்டை சரக காவல் உதவி ஆணையாளர் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கையானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, மேற்படி வழக்காவணங்களை பரிசீலனை செய்து, மேற்படி வழக்கானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் Spl.SC.No.7/2023 எனக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் படிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. அரசு தரப்பினர், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பினர் இரு சாராருக்கும் அளிக்க வேண்டிய சந்தர்ப்பம்



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:28:39 +0530

அளிக்கப்பட்டு, இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் 1 மற்றும் 2 எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என்று கருதவும், கருத்தில் கொண்டு வழக்கு நடவடிக்கைகளை செயலாற்றவும், வழிவகுப்பனவாக இருந்தமையால் 1ஆம் எதிரி மீது இதச 323, 498A, 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r) & (s), 3(2)(va)ன் கீழானக் குற்றச்சாட்டுகள் மற்றும் 2வது எதிரி மீது இதச 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(2)(va)ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவ, 1 மற்றும் 2 எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என குற்றத்தையும் குற்றச்சாட்டையும் மறுத்து விசாரணை வேண்டினர்.

3. இந்நிலையில், வன்கொடுமை தடுப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு இந்த சிறப்பு நீதிமன்றம் துவங்கப்பட்ட காரணத்தினால், மேற்படி வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, Spl.SC.No.7/2023 என அதே எண்ணில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுள்ளது.


R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:28:47 +0530

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது:</u>**

அ.சா.1 மௌல்யா இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். கன்னட தேவாங்கசெட்டி வகுப்பைச் சேர்ந்த 1ம் எதிரி அசா1ன் கணவர். 2ம் எதிரி, 1ம் எதிரியின் நண்பர். 1ஆம் எதிரி மற்றும் அசா1 இருவரும் மருத்துவர்கள். அசா1 மற்றும் 1ஆம் எதிரி ஆகிய இருவரும் 20.07.2021ம் தேதியன்று, திருச்செங்கோடு பிள்ளையார் கோவிலில் வைத்து காதல் திருமணம் செய்துள்ளனர். அ.சா.1 மௌல்யா பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பதால் 1ம் எதிரி வீட்டில் அசா1ஐ ஏற்றுக்கொள்ளவில்லை ஆனால் அசா1ன் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆரம்பத்தில் சுமுகமான உறவு, சேலம் பிள்யைார் நகருக்கு தனி குடித்தனம் வந்த பிறகு, அசா1க்கும், 1ம் எதிரிக்கும் இடையே நிறைய கருத்துவேறுபாடுகள் வந்துள்ளது. அசா1 பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பதால் எதிரி அசா1ஐ மேலே படிக்கக்கூடாது என்றும், வேலைக்கு


R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:28:54 +0530

செல்லக்கூடாது என்றும், யாரிடமும் போனில் பேசக்கூடாது என்றும், வெளியில் செல்லக்கூடாது என்றும், பெற்றோருடனும் பேசக்கூடாது என்றும், கெட்ட வார்த்தைகளிலும் திட்டி, அசா1 ஐ அடித்து துன்புறுத்தியுள்ளார். அசா1 இளநிலை மருத்துவ பட்டம் படித்திருந்த நிலையில், அவரை முதுநிலை பட்டம் படிப்பதற்கு 1ம் எதிரி அசா1 ஐ அனுமதிக்கவில்லை மற்றும் அதற்குரிய தேர்வு எழுதவும் விண்ணப்பிக்க அனுமதிக்கவில்லை. அவ்வாறு விண்ணப்பம் செய்ததாலும் பட்டியல் இனத்தவர் என்று குறிப்பிடக்கூடாது என்றும், others என்று குறிப்பிடவேண்டும் என்று அசா1 ஐ வற்புறுத்தியுள்ளார்.

6. 25.03.2022ம் தேதியன்று விண்ணப்பத்திற்கு கடைசி நாள் என்பதால், அன்றைய தினம் அசா1 மௌல்யா இந்து அருந்ததியர் என்று குறிப்பிட்டு விண்ணப்பித்து விட்டதால், 1ம் எதிரி மது அருந்திவிட்டு வந்து, அசா1 ஐ தினமும் அடித்து துன்புறுத்தியும், கெட்ட வார்த்தைகளாலும் திட்டியுள்ளார். 2022ம் ஆண்டு, ஜனவரி மாதம், சேலம் ஸ்டீல் பிளான்ட் மருத்துவமனையில் இருந்து வேலைக்கு அசா1க்கும், 1ம் எதிரிக்கும் கடிதம் வந்த நிலையில், அசா1க்கு மட்டும் 20.04.2022ம் தேதியன்று, மேற்படி வேலைக்கு



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:29:02 +0530

சேரவேண்டும் என்று கடிதம் வந்துள்ளது. ஆனால், 1ம் எதிரி மேற்படி வேலைக்கு அசா1 ஐ சேரகூடாது என்று தடுத்தும், அசா1 மேற்படி பணியில் சேர்ந்து, பணியை முடித்து அன்று மாலை 5.00 மணியளவில் வீட்டிற்கு திரும்பிய போது, அன்றிரவு 8.30 மணியளவில், 1ம் எதிரி மது அருந்திவிட்டு, இரவு 9.30 மணியளவில், அசா1 டம் தகராறு செய்ய ஆரம்பித்து, அன்று இரவு முழுவதும் 1ம் எதிரி, அசா1 டம் தகராறு செய்து, அசா1 ஐ பார்த்து, 1ம் எதிரி தான் சொல்லசொல்ல நீ வேலைக்கு போகிறாய் என்று அசா1 ன் ஜாதியை சொல்லி திட்டி அடித்தும், தலைமுடியை பிடித்து இழுத்து இடது பக்க தலையை சுவற்றில் மோதி, கன்னத்தில் அறைந்தும், அந்த சமயத்தில் அசா1 மூன்று மாத கால கர்ப்பிணியாக இருந்துள்ளார் என்பது தெரிந்தும், அசா1 ன் வயிற்றில் எட்டி மிதித்து, வாயை பொத்தி, கத்தக்கூடாது என்பதற்காக வீட்டின் மின் விளக்குகளை அனைத்துவிட்டு, செல்போனை பிடுங்கிகொண்டு அசா1 ஐ வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு, 1ம் எதிரி சாவியை எடுத்து சென்று விட்டார்.

7. 1ம் எதிரி அசா1 ஐ தாக்கியதால், அசா1 வாந்தி எடுத்து மயங்கி விட்டதனால், 1ம் எதிரி அவரது நண்பரான 2ம் எதிரிக்கு போன்

செய்து ஏதேனும் மருந்து எடுத்து வரும்படி போனில் தெரிவித்து, வெளியில் சென்ற 1ம் எதிரி, 2ம் எதிரியுடன் திரும்பி வந்துள்ளார். அசா1 அவருடைய சித்தியின் வீட்டிற்காவது அல்லது மருத்துவமனைக்காவது அழைத்துச் செல்லும் படி 2ம் எதிரியிடம் தெரிவித்த போதிலும், 2ம் எதிரியும் அதற்கு உதவி புரியவில்லை. மேலும் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றால் 1ம் எதிரி தாக்கியதையும் 2ம் எதிரியை 1ம் எதிரி அழைத்து வந்ததை பற்றியும் வெளியில் சொல்லக்கூடாது என்றும், மீறி சொன்னால் கொன்றுவிடுவதாக அசா1ஐ மிரட்டியுள்ளார்கள். அதன் பிறகு விடியற்காலை 4.00 மணியளவில், மேற்படி விஷயத்தை வெளியில் சொல்லமாட்டேன் என்று சொன்ன பிறகு எதிரிகள் அசா1ஐ அஸ்தம்பட்டியில் உள்ள JS மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். அம்மருத்துவமனையில் அசா1ஐ யாரிடமும் பேசவிடாமல், அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், வாந்தி எடுத்துவிட்டதாகவும், 1ம் எதிரி மருத்துவமனையில் சொல்லியுள்ளார். இந்நிலையில், அசா1ன் பெற்றோர்கள் மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது, அவர்களிடம் எதுவும் சொல்ல இயலாததால், அன்றைய



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:29:17 +0530

தினம் சிகிச்சை முடித்து, மாலை 5.00 மணியளவில், வீட்டிற்கு அவரது பெற்றோருடன் சென்ற அசா1 இவ்வழக்கு சம்மந்தமாக 23.04.2022 ம் தேதியன்று, அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகாரில் உள்ள சங்கதிகளை அசா1 சொல்ல அவரது தம்பி எழுதி அ.த.சா.ஆ.1–புகார் கொடுத்துள்ளார். புகாரில் உள்ள கையொப்பத்தை தன்னுடையது தான் என்று அடையாளப்படுத்தியுள்ளார்.

8. கடந்த 15.05.2022 ஆம் தேதி, 14.30 மணியளவில், அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக அ.சா.5 சிவகாமி பணியில் இருந்த போது, அசா1 மௌல்யா நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை பெற்று, அதனை பரிசீலித்து, அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 23/2022 சட்டப்பிரிவுகள் 323, 498(A) 506(1) இதச உ/இ 3(1) (r), 3(1) (s), 3(2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டப்படி அ.த.சா.ஆ.6–முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகார் மனுவை இணைத்து சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மற்ற


R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:29:24 +0530

முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல் ஒன்றை அம்மாபேட்டை சரக காவல் உதவி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். வழக்கை புலன் விசாரணை செய்ய அதிகாரியை நியமனம் செய்ய வேண்டி சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை நகலுடன் அ.த.சா.ஆ.7–வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

9. சேலம் மாநகரம் அம்மாபேட்டை சரக காவல் உதவி ஆணையாளராக அ.சா.6 காவல் உதவி ஆணையாளர் சரவணகுமரன் பணிபுரிந்த போது, சேலம் மாநகர வடக்கு காவல் துணை ஆணையாளர் பிறப்பித்த அ.த.சா.ஆ.8. ஆன C.No.14/ SC and ST Act/DCP/North/SLMC/2022 dated 15.05.2022 படியான நடவடிக்கைகள் படி, அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் குற்ற எண் 23/2022 ச.பி. 323, 498(A), 506(1) இதச மற்றும் 3(1)(r), 3(1)(s) மற்றும் 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்தம் சட்டப்படியான வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்து கொண்டு, 15.05.2022 தேதி

17.00 மணிக்கு சம்பவ இடமான மரவனேரி – பொன்னாம்மாபேட்டை செல்லும் சாலையில் அமைந்துள்ள கதவு எண்.47 அண்ணாநகர் என்ற அ.சா.1 மௌலியா என்பவரின் வீட்டில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசா3 முத்துராஜா, சாட்சி தங்கராஜ் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு அ.த.சா.ஆ.3–பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.9–மாதிரி வரைபடம் தயாரித்து, பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்.

10.மேலும் காவல் உதவி ஆணையாளரான அ.சா.6 இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி.மௌல்யா மற்றும் அவரது தாயான சற்குணம், அவரது தந்தை கணேசன், மற்றும் சாட்சிகள் மலர்கொடி, மலரவன், முத்துராஜா, தங்கராஜ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கின் புகார்தாரர் சாதி குறித்து சம்மந்தப்பட்ட சேலம் மேற்கு வட்டாட்சியர் அவர்களுக்கும், 1, 2 எதிரிகளின் சாதி குறித்து தெரிந்துகொள்ள நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையம் வட்டாட்சியர் அவர்களுக்கும் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:29:39 +0530

11.கடந்த 05.09.2022 ஆம் தேதி, சேலம், அஸ்தம்பட்டி மண்டல வட்டாட்சியராக பணியில் இருந்த அசா2 செம்மலை என்பவர் மேற்படி காவல் உதவி ஆணையாளரான அ.சா.6 கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க தாதம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேலம் டவுன் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் விசாரணை அறிக்கை பெற்று, மேற்கண்ட அ.சா.1 மௌல்யா த/பெ கணேசன் இந்து ஆதிதிராவிடர் என்ற பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்று அ.த.சா.ஆ.2– ஜாதி சான்றிதழ் வழங்கியுள்ளார்.

12. கடந்த 05.07.2022 ம் தேதியில், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக அசா4 ரவி பணியில் இருந்தபோது, இவ்வழக்கின் எதிரிகளுக்கு ஜாதி சான்றிதழ் கேட்டு அம்மாப்பேட்டை சரகம், காவல் உதவி ஆணையாளரான அசா6 கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று, பள்ளிப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பள்ளிப்பாளையம் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று, மேற்படி 1ம் எதிரி சந்தோஷ்குமரன் த/பெ ஜெகநாதன் என்பவர் இந்து தேவாங்கசெட்டியார் என்ற பிற்படுத்தப்பட்ட



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:29:49 +0530

சமூகத்தை சார்ந்தவர் என்று அ.த.சா.ஆ.4–ஜாதி சான்றிதழ் வழங்கியுள்ளார். மேலும், பள்ளிப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பள்ளிப்பாளையம் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று, மேற்படி 2ம் எதிரி ராஜ் கணேஷ் லிங்கம் த/பெ பிரகாஷ் என்பவர் இந்து தேவாங்கசெட்டியார் என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர் என்று அ.த.சா.ஆ.5–ஜாதி சான்றிதழ் வழங்கியுள்ளார்.

13. இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் உயர் நீதிமன்ற உத்தரவின் படி நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றதால் அவர்களை காவல் உதவி ஆணையாளரான அ.சா.6 சரவணகுமரன் கைது செய்யவில்லை. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் சிவகாமி என்பவரை 14.09.2022 தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மற்ற சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விசாரணையை முடித்து 1, 2 எதிரிகளுக்கு எதிராக ச.பி. 323, 498(A), 506(1) இதச மற்றும் 3(1)(r), 3(1)(s) மற்றும் 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்தம் சட்டப்படியான குற்ற இறுதி



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:29:57 +0530

அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அ.சா.6–ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

14. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா பிரிவு 351(1)(ஆ)ன் படி 1 மற்றும் 2 எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவியபோது, 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சியம் என்று கூறினார்கள். 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் ஏதும் இல்லை என்று கூறினர். மேலும் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா பிரிவு 351(5)ன் படி எழுத்து மூலமான பதிலுரையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்டது.

15. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

16.இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தக்க



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:30:04 +0530

சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

17.**தீர்வு:–**

இவ்வழக்கானது கடந்த 15.05.2022 ஆம் தேதி, 14.30 மணியளவில், அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், காவல் ஆய்வாளராக அ.சா.5 சிவகாமி பணியிலிருந்த போது, அசா1 மௌல்யா காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த அதசாஆ 1– புகார் மனுவினை பெற்று, புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.23/2022 சட்டப்பிரிவுகள் 323, 498(A) 506(1) இதச உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டப்படி அ.த.சா.ஆ.6–முதல் தகவல் அறிக்கைபடி துவங்கியுள்ளது.

18. கற்றறிந்த அரசு சிறப்பு வழக்கறிஞர், இவ்வழக்கின் வாதியான அ.சா1 மௌல்யா தனது முதன்மை சாட்சியத்திலும், அன்றே எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையிலும், எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையிலேயே



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:30:10 +0530

சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அசா3 முத்துராஜா, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளரான அசா5 சிவகாமி, மற்றும் புலனாய்வு அலுவலரான அம்மாபேட்டை சரக காவல் உதவி ஆணையாளரான அசா6 ஆகியோரின் சாட்சியம் 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அசா1 மௌல்யா பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பதும் 1 மற்றும் 2 எதிரிகள் பட்டியல் இனம் அல்லாத சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதும் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே 1 மற்றும் 2 எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

19. 1 மற்றும் 2 எதிரிகள் எந்த குற்றமும் புரியவில்லை என்றும், அசா1 மற்றும் எதிரிகள் சமாதானமாகிவிட்டதாகவும், இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட சாட்சியாக முன்னிறுத்தப்பட்டுள்ள அசா1 ன்னே தனது குறுக்கு விசாரணையில் எதிரிகள் மீதானக் குற்றச்சாட்டை தான் வற்புறுத்தவில்லை என்றும், எதிரிகளை விடுதலை செய்வதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:30:19 +0530

இந்நிலையில் பார்வைமகஜர் சாட்சியான அசா3, முதல் தகவல் அறிக்கை சாட்சியான அசா5 சிவகாமி, புலன்விசாரணை அலுவரான காவல் உதவி ஆணையாளர் அசா6 ஆகியோரின் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரிகளை குற்றவாளிகள் என்று தீர்மானிக்க இயலாது என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

20. இவ்வழக்கின் வாதியான அ.சா.1 மௌல்யா இந்து ஆதிதிராவிடர் எனும் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பது அஸ்தம்பட்டி மண்டல வட்டாட்சியரான அசா2 வழங்கிய அ.த.சா.ஆ.2 ல் கண்ட ஜாதி சான்றிதழ் மூலமும், 1 மற்றும் 2 எதிரிகள், பட்டியல் இனம் அல்லது பழங்குடி இனம் அல்லாத வகுப்பை சார்ந்தவர்கள் என்பது குமாரபாளையம் மண்டல துணை வட்டாட்சியரான அசா4 ரவி வழங்கியுள்ள அ.த.சா.ஆ.4 ல் கண்ட சாதி சான்றிதழ் மூலமும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

21. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் புகார் கொடுத்த சாட்சியான அசா1 மற்றும் எதிரிகள் தரப்பில், தாங்கள் சமாதானமாகி விட்டதாகவும்,



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:30:29 +0530

இவ்வழக்கின் எதிரிகளை சமாதனத்தின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டி அனுமதி கோரி பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 359(1) மற்றும் 359(2)ன் கீழ் தாக்கல் செய்த இரு மனுக்களும், மேற்படி குற்றச்சாட்டு சமாதனம் செய்ய இயலாத வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

22. இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட சாட்சியான அசா1 தனது முதன்மை சாட்சியத்தில் மற்றும் அன்றே எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையிலும், எதிரிகளுக்கு எதிராக, அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையிலேயே சாட்சியமளித்துள்ள போதிலும், பின்னிட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது, தங்களுக்கு இடையேயான பிரச்சனைகள் அனைத்தும் முடிந்து விட்டதால், எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்வதற்கு தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும், புகார் மற்றும் தனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை வற்புறுத்தவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

23. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்கள் மற்றும் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பாரதிய நாகரிக் சுரக்ஷா



R THOTHIRAMARY

Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:30:37 +0530

சம்ஹிதா பிரிவு 351(5)ன் படி எழுத்து மூலமான பதிலுரை, பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 359(1) மற்றும் 359(2)ன் கீழ் தாக்கல் செய்த இரு மனுக்களை பரிசீலனை செய்த வகையில், அசா1 மற்றும் 1ஆம் எதிரி ஆகிய இருவரும் மருத்துவர்கள் என்பதும், அவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டு 3 மாதங்கள் கருவுற்ற நிலையில், மேற்படி வழக்கு சம்பவமானது நடைபெற்றுள்ளது என்பதும், மேற்படி கரு கலைந்து விட்டது என்பதையும், அசா1 மற்றும் 1ஆம் எதிரி தரப்பில் சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட HMOP 202/2026 என்ற விவாகரத்து மனுவானது கடந்த 22.06.2026 அன்று அனுமதிக்கப்பட்டு இருவரும் விவாகரத்து பெற்றுள்ளனர் என்பதும் தெளிவாகிறது. மேலும் அசா1 தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனுவானது சமாதானம் செய்ய இயலாத வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யப்பட்ட போதிலும், அசா1 மற்றும் 1 ஆம் எதிரிக ஆகிய இருவரும் மருத்துவர்கள் என்பதையும், அவர்களுடைய வயது மற்றும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் பார்வைமகஜர் மற்றும் அலுவல் சார்ந்த சாட்சிகளான (Official witness) அரசு தரப்பு சாட்சிகளின் அடிப்படையில் மட்டும் எதிரிகளை குற்றவாளிகள்



R THOTHIRAMARY Digitally signed by R THOTHIRAMARY Date: 2026.07.28 18:30:44 +0530

என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுவதால், சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு வழங்கி 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து 1 மற்றும் 2 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

24. முடிவில், 1வது எதிரி மீதான இதச 323, 498A, 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r)&(s), 3(2)(va)ன் கீழானக் குற்றச்சாட்டுகள் மற்றும் 2வது எதிரி மீதான இதச 506(1) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(2)(va)ன் கீழானக் குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2ஆம் எதிரிகளுக்கு வழங்கி 1 மற்றும் 2ஆம் எதிரிகளை பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா பிரிவு 258(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2ஆம்



R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:30:51 +0530

எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதுமில்லை. எனவே வழக்கு சொத்து சம்மந்தமான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 28 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R THOTHIRAMARY Digitally signed by R THOTHIRAMARY Date: 2026.07.28 18:30:59 +0530

**அமர்வு நீதிபதி (கூ.மு.பொ),**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்**
**(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான**
**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**

**பின் இணைப்பு –**

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| **சாட்சி எண்** | **சாட்சிகளின் பெயர் விவரம்** | **சாட்சிய விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.மௌல்யா | வாதி/ பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.2 | திரு.செம்மலை | அசா1 சம்மந்தமான ஜாதிச்சான்றிதழ் வழங்கிய மண்டல வட்டாட்சியர் |
| அ.சா.3 | திரு.முத்துராஜா | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | திரு.ரவி | எதிரிகள் சம்மந்தமான ஜாதிச்சான்றிதழ் வழங்கிய மண்டல துணை வட்டாட்சியர் |
| அ.சா.5 | திருமதி.சிவகாமி | புகார்மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளர். |

| | | |
|---|---|---|
| அ.சா.6 | திரு.சரவணகுமரன் | வழக்கை புலன்விசாரணை செய்து இறுதிஅறிக்கை சமர்ப்பித்த புலன்விசாரணை அலுவலரான காவல் துணை கண்காணிப்பாளர். |

**அரசு தரப்புச் சான்றாவணங்கள்–**

| **சான்றாவணங்–களின் எண்.** | **சான்றாவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது.** |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் மனு, நாள் 15.05.2022 | அ.சா–1 |
| அ.த.சா.ஆ.2 | அசா1 சம்மந்தமான ஜாதிச்சான்றிதழ், நாள் 05.09.2022 | அ.சா–2 |
| அ.த.சா.ஆ.3 | பார்வை மகஜர், நாள் 15.05.2022 | அ.சா–3 |
| அ.த.சா.ஆ.4 | 1 ஆம் எதிரி சம்மந்தமான ஜாதிச்சான்றிதழ், நாள் 0507.2022 | அ.சா–4 |
| அ.த.சா.ஆ.5 | 2 ஆம் எதிரி சம்மந்தமான ஜாதிச்சான்றிதழ், நாள் 22.12.2022 | அ.சா–4 |
| அ.த.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை, நாள் 15.05.2022 | அ.சா–5 |
| அ.த.சா.ஆ.7 | அசா5 புலன் விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம், நாள் 15.05.2022 | அ.சா–5 |
| அ.த.சா.ஆ.8 | சேலம் மாநகர வடக்கு காவல் துணை ஆணையாளர் பிறப்பித்த செயல்முறை ஆணை C.No.14/ SC and ST Act/DCP/North/SLMC/2022, dt 15.05.2022. | அ.சா–6 |
| அ.த.சா.ஆ.9 | மாதிரி வரைபடம், நாள் 15.05.2022 | அ.சா–6 |



R THOTHIRAMARY

Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:31:15 +0530

<u>**அரசு தரப்புச் சான்றுப் பொருள்–**</u> **இல்லை**

<u>**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்**</u>–இல்லை

R THOTHIRAMARY
Digitally signed by R THOTHIRAMARY
Date: 2026.07.28 18:31:29 +0530

**அமர்வு நீதிபதி (கூ.மு.பொ),**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்**
**(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான**
**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**

---

*Special Court for trial of cases under SC and ST Act, Salem.*

*Fair / Draft Judgment*
*in*
*Spl. SC.No.7/2021*

*Dt- 28.07.2026*

---